**முதன்மை சார்பு நீதிமன்றம், விழுப்புரம்**

**முன்னிலை : திரு. A. தமிழ்செல்வன், எம்.எல்.,**

**முதன்மை சார்பு நீதிபதி, விழுப்புரம்**

**2025ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 03ம் நாள் திங்கள்கிழமை**

**I.A. No.667/2024**

**in**

**OS.No.269/2021**

**(CNR.NO. TNVP02-000549-2021)**

1. அமுதா
2. நிஷாந்தி
3. சுகந்தி
4. சுகப்பிரியா .... மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

1. ரமேஷ்
2. மணிமாறன்
3. திவாகர்
4. ருக்கு .... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு 03.10.2024 தேதியில் தாக்கல் செய்யப்பட்டு கடந்த 21.01.2025 அன்று என் முன்பு இறுதியாக விசாரணைக்காக வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.V.கருணாமூர்த்தி, அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் நீதிமன்ற அழைப்பாணை அனுப்பியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் எந்தவித பிரதிநிதித்துவமும் இல்லாததால் மனுதாரர்கள் தரப்பு வாதம் கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலினை செய்தும், இது நாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

**<u>உத்தரவு</u>**

மனுதாரர்கள்/வாதிகளால் இம்மனு கட்டளை 6 விதி 17 சி.பி.சி-யின் கீழ் மேற்படி அசல் வழக்கில் பிராதினை திருத்தம் செய்து வழக்கை மேல்நடத்தக் கோரி பரிகாரம் வேண்டப்பட்டுள்ளது.

**<u>2. 1ம் மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம் பின்வருமாறு :-</u>**

மனுதாரர்கள் தரப்பில் தான் இம்மனுவில் 1ம்மனுதாரர் என்றும் அசல் வழக்கில் 1ம் வாதி என்றும், 2 முதல் 4 மனுதாரர்கள் 1ம் மனுதாரரின் குமாரத்திகள் என்றும், அவர்களுக்கும் சேர்ந்து 1ம் மனுதாரரே இவ்வழக்கினை நடத்தி வருவதாகவும், அசல் வழக்கில் மனுதாரர்கள் பிரதிவாதிகள் பேரில் தாவா சொத்து சம்பந்தப்பட்டு விளம்புகை பரிகாரம் கோரியும், தாவா சொத்தை பிரதிவாதிகள், வாதிகள் வசம் ஒப்புக்கொடுக்கவும் வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும், அதில் 2ம் பிரதிவாதி ஆட்சேபனை தாக்கல் செய்துள்ளார் என்றும், அந்த ஆட்சேபனையில் 2ம் பக்கத்தில் 2வது பத்தியில் வாதிகளால் தாவாவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணப்பட்டியல் எண்.1 24.09.1967 தேதியிட்ட கொமரசாமி மற்றும் அவரது குமாரர்களுக்கு இடையில் ஏற்பட்ட பாகப்பத்திரம் தாவாவில் கூறப்பட்டுள்ளது தவறு என்றும், உண்மையில் அது 24.12.1967 ஆகும் என்றும், ஆவணங்களை பரிசீலனை செய்தபோது ஆவண எண்1. நகலில் டிசம்பர் மாதம் என கண்டுள்ளது சரிதான் என்றும், எனவே பிராது தயாரித்து தட்டச்சு செய்யும்போது பிழை ஏற்பட்டுவிட்டது என்றும், மேலும் ஆட்சேபணையில் 3ம் பாராவில் கண்ட அம்சமான 04.08.2008 தேதியிட்ட கிரைய ஆவணம் எண்.911/2018 என கண்டுள்ள என்பது தவறு. உண்மையில் பதிவு நகல் பிராது ஆவண எண்.(2)-ல் பதிவு சமயத்தில் ஆவண எண்.911/2008 என கண்டுள்ளது சரியானதுதான் என்றும், இதுவும் தட்டச்சு செய்யும்போது பிழை ஏற்பட்டுவிட்டதாகவும், எனவே பிராதில் கண்ட ஆவணம் எண்.1 சம்பந்தப்பட்டு டிசம்பர் என்ற மாதத்தினை சேர்த்தும், செப்டம்பர் என்ற மாதத்தினை நீக்கரவு செய்யவும் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. எதிர்மனுதாரர்கள் தரப்பில் நீதிமன்ற அழைப்பாணை அனுப்பியும், எதிர்மனுதாரர்கள் யாரும் பெற்றுக்கொள்ளாததால் திரும்ப அனுப்பப்பட்டும், எதிர்மனுதாரர்களை நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாததால், தரப்பில் எந்தவித பிரதிநிதித்துவமும் இல்லாத காரணத்தினால் எதிர்மனுதாரர் தரப்பு முடிக்கப்பட்டுள்ளது.

4. மனுதாரர் தரப்பு வாதம் கேட்கப்பட்டு வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. மனுதாரர்கள், எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சியமோ, சான்றாவணங்களோ குறியீடு செய்யப்படவில்லை.

**5. தீர்வுக்கான பிரச்சினை :-**

இந்த மனு அனுமதிக்கத்தக்கதா அல்லது இல்லையா ?

**6. தீர்வு :-**

மனுதாரர் தரப்பு வாதம் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் நன்கு பரிசீலிக்கப்பட்டது.

7. மனுதாரர் தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர் அவர்கள் தம்முடைய வாதத்தில் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் அசல் வழக்கில் தாக்கல் செய்துள்ள ஆட்சேபனையில் 2ம் பக்கத்தில் 2வது பத்தியில் வாதிகளால் தாவாவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணப்பட்டியல் எண்.(1) 24.09.1967 தேதியிட்ட கொமரசாமி மற்றும் அவரது குமாரர்களுக்கு இடையில் ஏற்பட்ட பாகப்பத்திரம் தாவாவில் கூறப்பட்டுள்ளது தவறு என்றும், உண்மையில் அது 24.12.1967 ஆகும் என்றும், ஆவணங்களை பரிசீலனை செய்தபோது ஆவண எண்1. நகலில் டிசம்பர் மாதம் என கண்டுள்ளது சரிதான் என்றும், எனவே பிராது தயாரித்து தட்டச்சு செய்யும்போது பிழை ஏற்பட்டுவிட்டதாகவும், மேலும் ஆட்சேபணையில் 3ம் பாராவில் கண்ட அம்சமான 04.08.2008 தேதியிட்ட கிரைய ஆவணம் எண்.911/2018 என கண்டுள்ள என்பது தவறு. உண்மையில் பதிவு நகல் பிராது ஆவண எண்.(2)-ல் பதிவு சமயத்தில் ஆவண எண்.911/2008 என கண்டுள்ளது சரியானதுதான் என்றும் எனவே இம்மனுவை அனுமதிக்கவேண்டும் என்றும், வாதிட்டார்.

8. எதிர்மனுதாரர்கள் தரப்பில் நீதிமன்ற அழைப்பாணை அனுப்பியும், எதிர்மனுதாரர்கள் யாரும் பெற்றுக்கொள்ளாததால் திரும்ப அனுப்பப்பட்டும், எதிர்மனுதாரர்களை நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாததால், தரப்பில் எந்தவித பிரதிநிதித்துவமும் இல்லாத காரணத்தினால் எதிர்மனுதாரர் தரப்பு முடிக்கப்படுகிறது.

9. மனுதாரர் தரப்பு வாதம் மற்றும் வழக்கு ஆவணங்கள் நன்கு பரிசீலிக்கப்பட்டு மனுதாரர் தனது மனுவில் அசல் வழக்கில் பிராதினை திருத்தம் செய்து வழக்கை மேல்நடத்தக் கோரி பரிகாரம் கோரியுள்ளார். எதிர்மனுதாரர்கள் தரப்பில் நீதிமன்ற அழைப்பாணை அனுப்பியும், எதிர்மனுதாரர்களை நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாததால் எதிர்மனுதாரர் தரப்பு முடிக்கப்பட்டுள்ளது. மேலும் மனுதாரர் கோரியுள்ள பிராதில் உள்ள திருத்தங்கள் அசல் வழக்கில் உரிய தீர்வு காண்பதற்கும், ஆவணப்பட்டியல் எண்.(1) 24.09.1967 தேதியிட்ட கொமரசாமி மற்றும் அவரது குமாரர்களுக்கு இடையில் ஏற்பட்ட பாகப்பத்திரம் தாவாவில் தவறுதலாக தட்டச்சு பிழை ஏற்பட்டுவிட்டது என்றும், உண்மையில் அது 24.12.1967 என்று ஆவணத்தில் உள்ளது என்று கூறியுள்ளதை ஏற்கும்படியாக உள்ளது. மேற்படி ஆவணத்தை பரிசீலிக்கையில் அதில் 1967 டிசம்பர் 24ம் தேதி என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே மனுதாரர் கோரிவது போல் பிராதினை திருத்தம் செய்ய மனுதாரருக்கு வாய்ப்பு வழங்கி இந்நீதிமன்றம் இம்மனுவை அனுமதித்து முடிவு காண்கிறது.

**முடிவாக,** இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, சுருக்கெழுத்தரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தில் 03.02.2025 இன்று பகரப்பட்டது.

A TAMILSELVAN

Digitally signed by A TAMILSELVAN
Date: 2025.02.03 16:39:00 +0530

முதன்மை சார்பு நீதிபதி,
விழுப்புரம்.

**மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :-**

இல்லை.

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :-**

இல்லை.

A TAMILSELVAN

Digitally signed by A TAMILSELVAN
Date: 2025.02.03 16:38:49 +0530

முதன்மை சார்பு நீதிபதி,
விழுப்புரம்.